மேல் மாகாண கல்வித் திணைக்களம்.
Department Of Education- Western Province

முதலாம் தவணை மதிப்பீடு– 2018
First Term Evaluation – 2018

| | | | |
|---|---|---|---|
| தரம் Grade } 6 | பாடம் Subject } விஞ்ஞானம் | வினாத்தாள் Paper } I,II | நேரம் Time } 02 மணித்தியாலம் |

பெயர்:- ……………………………………………………………

**கவனத்திற்கு:**

- **பகுதி I இல் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பகுதி II இல் முதலாம் வினாவுக்கும் ஏனைய 4 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

## பகுதி - I

(01). நீரின் திண்ம நிலை பின்வருவனவற்றுள் எது?

1. நீராவி  2. கொதிநீராவி  3. மூடுபனி  4. பனிப்பாறை

(02). தாவரம் உணவைத் தயாரிக்கும், இது உயிர்களில் எதனுடன் தொடர்புடையது?

1. போசணை  2. வளர்ச்சி  3. இடப்பெயர்ச்சி  4. சுவாசம்

(03). பின்வருவனவற்றில் வளர்ச்சியடையாதது எது?

1. முருகைப்பாறை  2. பற்றீரியா  3. பூஞ்சனம்  4. கருங்கல்

(04). A. கடல் அனிமனி  B. தொட்டால் சிணுங்கி தாவரம்  C. ஆவாரம் மரம்

மேலுள்ளவற்றில் இடப்பெயர்ச்சியைக் காட்டாதது எது?

1. A,B மட்டும்  2. A,C மட்டும்  3. B,C மட்டும்  4. A,B,C எல்லாம்

(05). காபனீரொட்சைட்டு வாயு

1. உயிர்களின் சுவாசத்திற்கு அவசியம்
2. எரிதலுக்கு அவசியம்
3. சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக மாற்றும்.
4. உயிர்களின் சுவாசத்திற்கும், தகனத்திற்கும் அவசியம்.

(06). கடற்கரையில் வளரும் தாவரமாவது,

1. கிண்ணை  2. தாளை
3. ஐதரில்லா  4. சதைக்கரைச்சான்

(07). பல்லியின் உணவு முறை

1. மென்று உண்ணல்  2. மெல்லா விழுங்குதல்
3. இரை மீட்டல்  4. உறிஞ்சி குடித்தல்

(08). சிற்றிலையாகப் பிரிந்த இலையைக் கொண்ட தாவரம்

1. கொய்யா
2. கொசுஇலை
3. தொட்டால்சிணுங்கி
4. கற்றாலை

(09). ஒரு பதார்த்தத்தின் இழையவமைப்பு என்பதன் கருத்து,

1. விரலினால் தொடும்போது உணரும் அமைப்பு
2. இலகுவாக உடையக்கூடிய தன்மை
3. இழுக்கும்போது இழுபடும் தன்மை
4. தூளாக மாறாமல் தகடாகும் (நெளியக்கூடிய) தன்மை


(10). பனிக்கட்டி இடப்பட்ட கண்ணாடிக் குவளையில் சிறிது நேரத்தின் பின் வெளிப்பக்கமாக நீர்த்துளிகளைக் காணலாம். காரணம் யாது?

1. கண்ணாடியினூடாக நீர்த்துளிகள் வெளியேறுதல்
2. வளிமண்டல நீராவி ஒடுங்கி படிந்தமை
3. கண்ணாடியினூடாக நீராவி வெளியேறியமை
4. பனிக்கட்டியின் நீர் வெளியேறியமை

(11). கம்பி தயாரிப்பதற்கு பொருத்தமான பதார்த்தம் எது?

1. பிளாத்திக்கு
2. இறப்பர்
3. செம்பு
4. பொலிதீன்

(12). கீழுள்ள உருவில் P,Q,R சந்தர்ப்பங்களை முறையே குறிப்பது




1. நிலக்கீழ் நீர், மேற்பரப்பு நீர், படிவுவீழ்ச்சி
2. மேற்பரப்பு நீர், நிலக்கீழ் நீர், படிவுவீழ்ச்சி
3. படிவுவீழ்ச்சி, நிலக்கீழ் நீர், மேற்பரப்பு நீர்
4. படிவுவீழ்ச்சி, மேற்பரப்பு நீர், நிலக்கீழ் நீர்



kalvi.lk

(13). ஒளி,வெப்பம் போன்ற சக்தியில் இல்லாத சடப்பொருளில் காணப்படும் பொது இயல்பு யாது?

1. நிறம் காணப்படல்
2. திணிவைக் கொண்டது
3. உயிருள்ளது
4. வளருவது

(14). நுண்ணங்கிகள் வாழ்வது,

1. நீரில்
2. மண்ணில்
3. வளியில்
4. மண்,வளி,நீர் ஆகிய மூன்றிலும்.

(15). உணவை சுவையூட்ட கடலிலிருந்து பெறப்படும் உப்பு எது?

1. சோடியம் குளோரைட்டு
2. மக்னீசியம் குளோரைட்டு
3. கல்சியம் காபனேற்று
4. சோடியம் இருகாபனேற்று

(16). வன்மைத் தன்மை அதிகூடிய பதார்த்தம் எது?

1. இரும்பு
2. வைரம்
3. மாணிக்கம்
4. கருங்கல்

(17). நன்னீர் நீர்முதல் அல்லாதது எது?

1. நிலக்கீழ் நீர்
2. நீர் வீழ்ச்சி
3. கிணற்று நீர்
4. உவர் நீர்

(18). திணிவை அளக்கும் சர்வதேச அலகு,

1. kg
2. g
3. mg
4. mm

(19). மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. தொழிற்சாலையிருந்து வெளியேற்றப்படும் இரசாயனப்பதார்த்தங்களால் நீரிலுள்ள நுண்ணங்கிகள் அழிவடைவதால், அந்நீர் பருகுவதற்கு உகந்ததாக மாறும்.
2. அதிகளவு உப்பு கலந்த நீரே பருகுவதற்கு உகந்ததாகும்.
3. சுத்தமான நீர் நிறமற்றதாகும்.
4. சுத்தமான நீர் நீல நிறத்தில் இருக்கும்.

(20). இலங்கையில் சிறுநீரக நோய் பரவுவதற்கு பிரதான காரணமாக அமைவது,

1. உடற்பயிற்சி செய்யாமை
2. மாசு நீரைப் பயன்படுத்தல்
3. அமிலம் சேர் உணவு வகைகளை அதிகளவு பயன்படுத்தல்.
4. புகைத்தல்




kalvi.lk

# பகுதி - II

**✦ முதலாம் வினாவுக்கும் ஏனைய 04 வினாக்களுக்கும் விடைதருக.**


(01). **A).** தரம் 6 வகுப்பு மாணவர்கள் சிலர் திரவம், வாயுக்களின் நடத்தை பற்றி அவதானிப்பதற்காக தயாரிக்கப்பட்ட செய்முறை ஒழுங்கமைப்பு மூன்று கீழே தரப்பட்டுள்ளது. அதன் அவதானத்தை வைத்து வரக்கூடிய முடிவுகளை பக்கத்திலுள்ள இடைவெளியில் எழுதுக. (6 புள்ளிகள்)

i. 


முடிவு

....................................................................


....................................................................

ii. 


முடிவு

....................................................................

....................................................................

iii. 

முடிவு

....................................................................

....................................................................

B). 1. கீழுள்ள நீர்வாழ் அங்கிகளை அடையாளங் கண்டு பெயரை எழுதுக. (4 புள்ளி)

i. 

ii. 

............................................................ ............................................................

2. மேலே உரு ii இல் உள்ள நுண்ணங்கியை ஆய்வுகூடத்தில் அவதானிக்கப் பயன்படும் உபகரணத்தின் பெயர் யாது? (1 புள்ளி)

..............................................................................................................................



kalvi.lk

C). மாணவனொருவன் தனதுவீட்டுத் தோட்டத்தில் அடையாளம் கண்ட சில அங்கிகள் கீழே தரப்பட்டுள்ளன. அதனைப் பயன்படுத்தி தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| *மீன் | *தவளை | *பருந்து | *மண்புழு |

1). இடம்பெயர சிறகுகளைப் பயன்படுத்தும் விலங்கு எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

2). உடலில் செதில்களைக் கொண்ட அங்கி எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

3). ஈரூடக வாழி (உபய வாழி) எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

4). உடல் முழுவதும் இறகுகளால் மூடப்பட்ட அங்கி எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

5). கால்களற்ற இடப்பெயர்ச்சியடையும் விலங்கு யாது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

(02). **A).** பச்சைத்தாவரம் பல்வேறுகாரணிகளைப் பயன்படுத்தி உணவை உற்பத்தி செய்வதை ஒளித்தொகுப்பு என்போம்.

1). தாவரங்களில் உணவு தயாரிப்பதற்காக காணப்படும் பச்சை நிறப் பொருள் எவ்வாறு அழைக்கப்படும்? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

2). ஒளித்தொகுப்புக்காக வளி மண்டலத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் வாயு எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

3). ஒளித்தொகுப்பின்போது வளிமண்டலத்திற்கு வெளிவிடப்படும் வாயுவை தருக. (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

4). தாவரத்தை தற்போசணி என கூறக் காரணம் யாது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

5). விலங்குகளை பிறபோசணி எனக் கூறக் காரணம் யாது? (2 புள்ளி)

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………



kalvi.lk

**B).** கீழே காணப்படும் இணைக்கவர்ச் சுட்டியில் இடைவெளிகளை நிரப்புக. (5 புள்ளி)

ஆடு, குதிரை, தேன் பூச்சி, கரப்பான் பூச்சி

சிறகுகளைக் கொண்டது | i. ……………………………………………

i. ……………………………… ii. ………………………………

ஆடு,குதிரை

விசக்கொம்பு உண்டு | விசக்கொம்பு இல்லை | iv. …………………… | v. ………..…………

தேன்பூச்சி | கரப்பான் பூச்சி | ஆடு | குதிரை

(03). கீழுள்ள கூற்றுக்கள் சரியாயின் ✓என்றும் பிழையாயின் × எனவும் குறிக்க.

1). விலங்குகளில் பச்சையம் இல்லை. ( )

2). எல்லா நுண்ணங்கிகளும் மனிதர்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். ( )

3). எல்லா சடப்பொருட்களும் இடத்தைப் பிடிக்கும். ( )

4). நீர் திண்மம், திரவம், வாயு நிலைகளில் காணப்படும். ( )

5). உவர் நீரைவிட சவர் நீரில் உப்புச் செறிவு அதிகம். ( )

6). நீர் இயற்கையானதும் குறிப்பிட்ட அளவே உள்ளதுமான வளம் ஆகும். ( )

7). திணிவை அளக்க மில்லிகிராம் எனும் அலகும் பயன்படுகிறது. ( )

8). கடல் அனிமனி இடம் பெயரக் கூடிய அங்கி ஆகும். ( )

9). தாவரங்களில் ஒளித்தொகுப்பின்போது காபனீரொட்சைட்டு வெளிவிடப்படும். ( )

10). கறிவேப்பிலைத் தாவர இலை மாலையில் வாடும். ( )

11). பூமியிலுள்ள மொத்த நீரில் 10% ஆனதே பருகப் பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ளது. ( )

(11 புள்ளி)

(04). கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(நீராவி, நீரினால், உப்பு, சூரியன், உவர்நீர், நன்னீர், மண், வடிவம், சக்தி, வாயு, கரி)

1) கடல் நீரை வெப்பமேற்றி ஆவியாக்கும் போது அதில் கரைந்துள்ள……………………… கீழே படியும்.

2). புவிமேற்பரப்பில் 70%ஐ விட அதிகம் ……………………..………………… மூடப்பட்டுள்ளது.

3). உணவிலுள்ள சக்தி ……………………………………….…… இலிருந்து கிடைத்ததாகும்.



kalvi.lk

4). ……………………………………………………………… இன் உப்புச் சுவை மிக அதிகமாகும்.

5). சவர் நீரின் உப்பின் அளவு உவர் நீரைவிட குறைவாயினும் ……………………………ஐ விட அதிகம்.

6). வாயுக்களுக்கு குறிப்பிட்ட ……………………………………………………………… இல்லை.

7). ……………………………………… வைக் கொண்ட பாத்திரம் முழு இடத்தையும் பிடிக்கும்.

8). ஒலி ………………………………………………………………………க்கு ஒரு உதாரணமாகும்.

9). ……………………………………………………… வாயு நிலையிலுள்ள நீருக்கு உதாரணமாகும்.

10).……………………………………………………………………… உடையக்கூடிய பதார்த்தமாகும்.

11).மண்ணில் வளரும் தாவரங்கள் ………………………… இனுள் உள்ள நீரைஉறிஞ்சும்.

(11 புள்ளி)

(05). **A). வாட்டற்றகவு, நீட்டற்றகவு, மீள் தன்மை, நொருங்குமியல்பு, வன்மைத்தன்மை** போன்றன திண்மப் பொருட்களின் இயல்புகள் ஆகும். இவ்வியல்புகளைக் கொண்ட பல்வேறு உற்பத்திகளை நாம் பயன்படுத்துகிறோம்.

1). பின்வரும் சந்தர்ப்பங்களில் கோடிடப்பட்ட பொருட்களின் எவ்வியல்பு பயன்படுத்தப் படுகிறது என மேலே தரப்பட்டவற்றிலிருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக. (3 புள்ளி)

a). கட்டட நிர்மாணத்தில் **கருங்கல்** பயன்படுத்தல். ………………………………………

b). பல வடிவங்களில் ஆபரணதயாரிப்பில் **தங்கம்** பயன்பாடு ……………………………

c). பலூன் உற்பத்தியில் **இறப்பர்** பயன்படுத்தல் ……………………………………………

2). திண்மப் பதார்த்தத்தின் வாட்டற்றகவு என்பதன் கருத்து யாது? (2 புள்ளி)

……………………………………………………………………………………………………

3). கண்ணாடி, இறப்பர், பலகை, பிளாத்திக்கு என்பவற்றில் நொருங்குமியல்பு கூடிய பதார்த்தம் எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………

4). பிளாத்திக்கு பாவனைக்கு மனிதர் பழகியிருந்தாலும் அதனால் ஏற்படும் சூழல் பாதிப்பு மிக அதிகம். அவ்வாறான பாதிப்பை ஏற்படுத்த காரணமான பிளாத்திக் கிலுள்ள இயல்பை தருக. (1 புள்ளி)

……………………………………………………………………………………………………



kalvi.lk

B. சடப்பொருளின் பௌதீக இயல்பு தொடர்பாக அட்டணையை நிரப்புக. (4 புள்ளி)

| இயல்பு | திண்மம் | திரவம் | வாயு |
|---|---|---|---|
| வடிவம் | நிலையான வடிவம் உண்டு | i. | ii. |
| கனவளவு | iii. | மாறாத கனவளவு உண்டு | iv. |

(06). தரம் 6இல் கல்வி கற்கும் நஜார் அஹமடின் வீட்டுக்குப் பக்கத்தில் காணப்படும் நன்னீர் குளத்தின் மாதிரிப்படம் காட்டப்பட்டுள்ளது. அது தொடர்பாக கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.



1). இச்சூழலில் காணப்படும் உயிரற்ற பதார்த்தம் ஒன்று தருக. (1 புள்ளி)

............................................................................................................................

2). இச்சூழலில் வாழக் கூடிய ஊனுண்ணிப் பறவை ஒன்று தருக. (1 புள்ளி)

............................................................................................................................

3). நீர்த் தாவரங்களிலிருந்து வாயுக் குமிழிகள் வெளியேறுவதாக நஜார் அவதானித்தான்.

a). வாயு வெளியேற்றத்திற்கு காரணமான, பகல் நேரத்தில் தாவரத்தினுள் நிகழும் உயிரியல் செயற்பாடு யாது? (1 புள்ளி)

............................................................................................................................

b). இவ்வாறான சூழலில் நீரினுள் வளரும் ஒரு தாவரத்தைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

............................................................................................................................

4). a).இங்குவாழும் மீனின் சுவாச உறுப்பு யாது? (1 புள்ளி)

............................................................................................................................



kalvi.lk

b). நீரில் கரைந்துள்ள ஒரு வாயுவை மீன் சுவாசிக்கிறது. அவ்வாயு எது? (1 புள்ளி)

……………………………………………………………………………………………………………

5). நீர்ச் சூழலில் வெற்றிகரமாக வாழ மீன்கள் கொண்டுள்ள இயல்புகள் இரண்டு தருக.

……………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………… (2 புள்ளி)

6). இங்குவாழும் ஆமையின் இடப்பெயர்ச்சி முறைகள் இரண்டு தருக. (2 புள்ளி)


……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

7). இந்த குளத்து நீரில் வாழக் கூடிய நுண்ணங்கி ஒன்றின் பெயரைத் தருக. (2புள்ளி)

……………………………………………………………………………………………………………


(07). A). தரப்பட்டுள்ள இணைக்கவர் சுட்டியில் (i) முதல் (vi) வரையான இடைவெளிகளுக்குப் பொருத்தமான இயல்புகளை எழுதுக.








kalvi.lk

B). கீழுள்ள படங்களை உபயோகித்து வினவப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.


பலாமரம்


ஆமை


முயல்


மண்புழு

i). மேலுள்ள அனைத்தையும் அழைக்கக் கூடிய பொதுவான பெயர் யாது? (1புள்ளி)

..............................................................................................................................

ii). பலா மரத்தில் அவதானிக்கக் கூடிய ஆனால் முயல், ஆமை ஆகியவற்றில் அவதானிக்க முடியாத இயல்புகள் இரண்டை எழுதுக. (2புள்ளி)

..............................................................................................................................

..............................................................................................................................

iii). பலாமரம் முயல் ஆகிய இரண்டிலும் அவதானிக்கக் கூடிய பொது உயிரியல் இயல்புகள் இரண்டைத் தருக. (2 புள்ளி)

..............................................................................................................................

..............................................................................................................................

iv). மேலுள்ள விலங்குகளில்,

a). ஊர்வன எது? ........................................................................ (1புள்ளி)

b). முலையூட்டி எது? ........................................................................ (1புள்ளி)

v). தாவர உண்ணி, ஊனுண்ணி, அனைத்துமுண்ணி ஆகியவற்றுள் முயல் எவ்வகையைச் சேர்ந்தது? (1புள்ளி)

..............................................................................................................................

Education கல்வி අධ්‍යාපන

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page